முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்
அ.வ.எண். 241/2015

வா.சா. 1, ஸ்ரீகாந்த்
பக்கம் 4
21.10.2024

**2 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

2000ம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்திற்கு பின்னர் லட்சுமணன் ஏதாவது ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்தாரா என்றால் இல்லை. வருவாய் ஆவணங்களிலாவது சீராளன் மற்றும் லட்சுமணன் ஆகியோரின் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை அது கூட்டு பட்டாவாக தான் இருந்தது.

**கேள்வி**

என்னுடைய தந்தையின் காலத்திற்கு பின்னிட்டு பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் வருவாய் ஆவணங்களில் தனிப்பட்டவாக பிரித்து எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம்?

**பதில்**

2008 ஆம் ஆண்டு என்னுடைய சித்தப்பா காலமாகிவிட்டார். அதற்கு முன்னர் என்னுடைய சித்தப்பா சென்னையில் வசித்து வந்த காரணத்தினாலும் அவருக்கு உடல்நிலை இல்லாத சரி இல்லாத காரணத்தினாலும் என்னுடைய தந்தைக்கும் சித்தப்பாவிற்கும் படிப்பறிவு இல்லாத காரணத்தினாலும்நமது சொத்துதான் என்று எப்பொழுதாவது பிரித்துக் கொள்ளலாம் என்று அவ்வாறு வைத்திருந்தோம்.

சொத்துக்கான வரி எதுவும் செலுத்தி வந்தோமா என்றால் வருவாய்த் துறையினர் வரி கூறி எந்த ஒரு அறிவிப்பும் அனுப்பாத காரணத்தினால் நான் செலுத்தி வரவில்லை. என்னுடைய பிராதில் வரி வகைகளை ஒழுங்காக செலுத்தி விடுவதாக சொல்லி உள்ளது சரிதான். சாமந்தி அம்மாவிற்கு மனநலம் சம்பந்தமாக எந்த ஒரு சிகிச்சையும் நான் அளிக்கவில்லை. லட்சுமணனுக்கும் சீராளனுக்கும் பாகப்பிரிவினை நடந்ததை காட்ட பதிவு செய்யப்பட்ட எந்த ஒரு ஆவணமும் இல்லை

என்றால் சரிதான் அது வாய்மொழியாக தான் பிரிக்கப்பட்டது. குடும்ப வீட்டை நாங்கள் பாகம் பிரித்துக் கொண்டதனை காட்ட ஏதாவது ஆவணம் தாக்கல் செய்து உள்ளோமா என்றால் இல்லை. சம்பந்தி அம்மாள் அவருக்கு உரிய பாகத்தை தான் இரண்டு மற்றும் மூன்று பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றும் அதனால் அதனை கேட்பதற்கு எனக்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து தொடர்பாக சாமந்தி அம்மாள் தான் தொந்தரவு செய்தார்கள். வழக்கை தாக்கல் செய்த காலகட்டத்தில் சாமந்தி அம்மாளுக்கு வயது 93 என்றால் சரிதான்.எங்களுக்குள் எந்த ஒரு பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றும் நான் இவ்வழக்கிற்காக வேண்டி அவ்வாறு பாகப்பிரிவினை ஏற்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாய்மொழியான பாகப்பிரிவினை மூலம் பெறப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக சீராளன் ஏதாவது பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளாரா என்றால் இல்லை.

(4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)

**Sd/-K.S. Arun Sabhapath,**

**Principal Sub Judge,Kancheepuram.**